செ.வெ.எண்: 54 நாள்: 19.03.2017

**இலுப்பூர் பேரூராட்சியில் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (19.03.2017) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை உதவிகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி இலுப்பூர் வட்டத்தை சேர்ந்த 300 பயனாளிகளுக்கு 300 புதிய குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இலுப்பூரில் புதிய பேருந்து நிலையம், புதிய அரசினர் உயர்நிலை பள்ளிக் கட்டிடம், பொதுபணித்துறை ஆய்வுமாளிகை கட்டிடம், வட்டார போக்குவரத்து அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சமுதாயகூட கட்டிடம் போன்ற அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தமிழகஅரசு பொதுமக்களின் நலனை மேம்படுத்தும் வகையில் விலையில்லா வெள்ளாடு, கறவை மாடுகள் வழங்கும் திட்டம், ஏழை பெண்களின் திருமணத்திற்காக தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு போன்ற பல்வேறு மக்கள் நலத்திட்ட பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன் பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**